‘மக்களுடன் முதல்வர்’ திட்டத்தின் கீழ் நலத்திட்ட உதவிகள் -

# 1,598 இளைஞர்களுக்கு அரசுப் பணி நியமன ஆணைகள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இன்று வழங்குகிறார்!

சென்னை, பிப்.16

சென்னை கலைவாணர் அரங்கில் “மக்களுடன் முதல்வர்” திட்டத்தின் கீழ் நலத்திட்ட உதவிகள் மற்றும் 1,598 இளைஞர்களுக்கு அரசுப் பணி நியமன ஆணைகளை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்று (16.2.2024) வழங்குகிறார்.

அரசு அலுவலர்களை தேடிச் சென்று மக்கள் மனுக்களை தந்து குறைகளைக் தெரிவித்து, தீர்வு காண்பது என்பது இதுவரை நடைமுறையாக இருந்தது. ஆனால், மக்களின் நலன் நாடி நாள்தோறும் திட்டங்களை வகுத்துச் செயல்படுத்திடும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மக்களைத் தேடி அதிகாரிகள் சென்று குறை கேட்டுத் தீர்த்துவைத்திட வேண்டும் என்று விரும்பினார்.

முதலமைச்சர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றது முதல் மக்கள் அளிக்கும் கோரிக்கை மனுக்கள் மீது உடனுக்குடன் நடவடிக்கை எடுத்து அவர்களின் குறைகளைத் தீர்ப்பதில் முன்னுரிமை அளித்து வருகிறார்.

அந்த வகையில், அரசு நிர்வாகத்தையும், பொதுமக்களையும் இணைக்கும் வகையில் முதலமைச்சர் அவர்கள் மக்களுடன் முதல்வர் என்னும் ஒரு முன்னோடித் திட்டத்தை கோவை மாநகரில் 18.12.2023 அன்று தொடங்கி வைத்தார். இத்திட்டத்தின்கீழ் எரிசக்தித் துறை, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, ஊரக வளர்ச்சித் துறை, நகராட்சி நிர்வாகத் துறை, ஆதிதிராவிடர் நலத் துறை, பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, காவல்துறை, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை, கூட்டுறவுத் துறை, சிறு, குறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை, மாற்றுத் திறனாளிகள் நலத் துறை, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை ஆகிய 13 அரசுத் துறைகள் மூலம் மக்களுக்குப் பல்வேறு சேவைகள் வழங்கப்படுகின்றன.

இந்த 13 அரசுத் துறை அதிகாரிகளுடன் மக்களுடன் முதல்வர் திட்டத்தின் கீழ், தமிழ்நாட்டின் பல்வேறு நகரங்களில் 2,058 முகாம்கள் நடத்தப்பட்டன.

இந்த முகாம்களில் மக்களிடமிருந்து பெறப்பட்ட மனுக்கள் மீது 35 நாட்களுக்குள் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு 3 இலட்சத்து 50 ஆயிரம் மனுக்கள் மீது மக்கள் மன நிறைவு கொள்ளும் வகையில் தீர்வுகள் காணப்பட்டுள்ளன. இதன் மூலம் தமிழ்நாடு முழுவதிலும் பயன்பெற்ற மக்கள் முதலமைச்சர் அவர்களையும் இந்த அரசையும் பெரிதும் பாராட்டி வருகிறார்கள்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்று (16.2.2024 - வெள்ளிக்கிழமை) காலை 10.30 மணியளவில் சென்னை கலைவாணர் அரங்கில், மகத்தான வெற்றி கண்டுள்ள “மக்களுடன் முதல்வர்” திட்டத்தின்கீழ் விண்ணப்பம் செய்திருந்த பயனாளிகளுக்கு பல்வேறு துறைகளின் சார்பாக நலத்திட்ட உதவிகளை வழங்குகிறார்.

மேலும், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் பொதுப்பணித்துறை, கால்நடை பராமரிப்புத் துறை, நீர்வளத்துறை, வேளாண்மைத் துறை போன்ற பல்வேறு துறைகளுக்கு தெரிவு செய்யப்பட்ட 1,598 இளைஞர்களுக்கு பணி நியமன ஆணைகளையும் வழங்குகிறார்.

இந்த விழாவில், அமைச்சர் பெருமக்களும், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களும், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகளும், அரசு அலுவலர்களும், சீர்மிகு பெருமக்களும் கலந்துகொண்டு சிறப்பிக்கின்ற னர்.



தமிழ்நாடு விவசாயிகள் தொழிலாளர்கள் கட்சி மற்றும் தமிழ்நாடு அரசின் கட்டுமானத் தொழிலாளர்கள் நலவாரியத்தின் தலைவர் பொன். குமார் மகள் திவ்யா – ரஞ்சித் குமார் இணையரின் திருமணத்தை கழக இளைஞர் அணிச் செயலாளரும், அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சென்னை நீலாங்கரையில் நடத்தி வைத்தார். உடன் திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி, அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, இந்திய யூனியன் முஸ்லீம் லீக் தலைவர் காதர் மொய்தீன் உள்ளிட்ட முன்னணியினர் உள்ளனர்.

நாடாளுமன்றத் தேர்தல் - 2024

## கழக வேட்பாளராக போட்டியிட விரும்புவோர் விண்ணப்பம் தருவதற்கான தேதி விவரம்!

### பொதுச்செயலாளர் **துரைமுருகன்** அறிவிப்பு!

நடைபெறவிருக்கும் நாடாளுமன்றப் பொதுத்தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் வேட்பாளராக போட்டியிட விரும்புவோருக்கான விண்ணப்பப் படிவங்கள் வருகிற 19-2-2024 முதல் அண்ணா அறிவாலயத்திலுள்ள தலைமைக் கழகத்தில் கிடைக்கும்.

**போட்டியிட விரும்புகின்ற கழகத் தோழர்கள் விண்ணப்பத்தை முறையாக பூர்த்தி செய்து, 1-3-2024 முதல் 7-3-2024 மாலை 6 மணிக்குள் தலைமைக் கழகத்தில் சேர்ப்பித்திட வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.**

**வேட்பாளர் விண்ணப்பக் கட்டணம் - ரூ.50,000/-**

(விண்ணப்பப் படிவத்தை தலைமைக் கழகத்தில் ரூ.2,000/-வீதம் செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.)

“அண்ணா அறிவாலயம்”
சென்னை - 18
நாள்- 15-2-2024

**துரைமுருகன்**
பொதுச்செயலாளர்
தி.மு.க.

க.சுந்தர் எம்.எல்.ஏ. தலைமை - சி.கே.வி. தமிழ்ச்செல்வன் வரவேற்புரை!

## காஞ்சிபுரத்தில் “உரிமைகளை மீட்க ஸ்டாலினின் குரல்” பொதுக் கூட்டம்!

### அமைச்சர் எ.வ.வேலு சிறப்புரை! அமைச்சர் தா.மோ.அன்பரசன் பங்கேற்பு!

காஞ்சிபுரம் பிப். 16-

காஞ்சிபுரம் நாடாளுமன்றத் தொகுதி சார்பில் “உரிமைகளை மீட்க ஸ்டாலினின் குரல் - பாசிசம் வீழட்டும்! இந்தியா வெல்லட்டும்!” நாடாளுமன்றத் தொகுதி பரப்புரைக் கூட்டம் 18.2.2024 ஞாயிற்றுக்கிழமை அன்று மாலை 5.30 மணிக்கு, தேரடி காந்தி சாலை, காஞ்சிபுரத்தில் நடைபெறுகின்றது.

இக்கூட்டத்திற்கு மாவட்டக் கழகச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. தலைமை வகித்து சிறப்புரையாற்றுகிறார். சி.கே.வி.தமிழ்ச்செல்வன் அனைவரையும் வரவேற்கிறார்.

மாவட்டதுணைச் செயலாளர் க.செல்வம் எம்.பி., சி.வி.எம்.பி.எழிலரசன் எம்.எல்.ஏ., வரலட்சுமி மதுசூதனன் எம்.எல்.எ., மேயர் மகாலட்சுமி யுவராஜ் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர். இக்கூட்டத்தில் பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, சிறு குறு தொழில் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் ஆகியோர் சிறப்புரை யாற்றுகின்றனர்

இக்கூட்டத்தில மாவட்ட நிர்வாகிகள் ச.இனியரசு, டி.வி.கோகுலக்கண்ணன், மலர்விழிகுமார், சன்பிராண்டு கே.ஆறுமுகம், து.மூர்த்தி, வெ.விசுவநாதன், வி.சுகுமாரன், தி.அன்பழககன், பெ.சுந்தரவரதன், வி.எஸ்.ராமகிருஷ்ணன், டாக்டர் ஆர்.சுபேர்கான், வழக்கறிஞர் ஜெ.பச்சையப்பன், கான்ஸ்டன்டைன் ரவீந்திரன், கே.எஸ். எம்.நாதன், ப.ரிதி இளம்சுருதி மற்றும் பலர் கலந்துகொண்டு சிறப்பு ரையாற்றுகின்றனர்.

அ.தசரதன் நன்றி கூறுகிறார்.

